2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கொள்ளையர் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு பாரத ஸ்டேட் வங்கி ஒரு இலட்சம் ரூபாய் வெகுமதி அறிவித்துள்ளது.

இந்த வழக்கை விரைவில் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் கூறி அமைகிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Privilege Matter ஒன்று கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்னும் நான் பார்க்கவில்லை. பார்க்கிறேன். திரு. லா. சந்தானம்.

(ஈ) அருப்புக்கோட்டை அருகில் இருக்கங்குடி மாரியம்மன் கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றபோது ஏற்பட்ட பிரச்சினை

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கங்குடியில் கோயில் நிலத்திலே கடைகள் வைப்பது சம்பந்தமாக சில பிரச்சினைகள் வந்ததாக நேற்றைக்குக்கூட இந்த அவையிலே பேசப்பட்டது. அந்தப் பிரச்சினைகளினுடைய உண்மை நிலை என்ன என்பது அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், இந்த அவை அறிந்துகொள்ளும்படி அந்த நிகழ்ச்சிகளைச் சொல்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்தால் சொல்லலாம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த வருவாய்த் துறை அதிகாரிகள், இருக்கங்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நுழைவாயில் பாதையில்

ஆக்கிரமிப்பு செய்திருந்த கடைகளை அப்புறப்படுத்தத் தொடங்கினார்கள். கோயில் நிர்வாகத்தினரால் இவர்களுக்கு மாற்று இடம் தரப்பட்ட நிலையிலும், இந்த நடவடிக்கையைக் கடைக்காரர்கள் பலமாக எதிர்த்துள்ளார்கள்.

3-3-2002 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற வந்த வருவாய்த் துறை அலுவலர்களின் பாதுகாப்புக்காக வந்திருந்த திரு. சுந்தரேசன் என்ற காவல் துறை ஆய்வாளரை, கடைக்காரர்களில் ஒரு கூட்டத்தினர் தாக்கியிருக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஓட்டல் சுப்பையா என்கிற சுப்பையா, அருப்புக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் 7-3-2002 அன்று சரண் அடைந்துள்ளார். பின்னர், அவர் அருப்புக்கோட்டை சார் நிலைச் சிறையில், விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார். அவருக்கு அங்கு நெஞ்சு வலி எடுக்கவே, அவர் அருப்புக்கோட்டை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனளிக்காமல், அவர் 11-3-2002 அன்று பிற்பகல் 2-30 மணிக்கு மரணம் அடைந்துள்ளார். இறந்து போன சுப்பையாவின் உறவினர்கள், சிறையில் அவர் சித்திரவதை செய்யப்பட்டு இறந்து போனதாகக் கருதினார்கள். எனவே, அருப்புக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலர் ஆரம்பக் கட்ட விசாரணை செய்தார். அதை அடுத்து, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் காவல் துறை நிலை ஆணை எண் 145-ன்கீழ் விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை அரசியல் ஆக்குவதற்காக, மாண்புமிகு வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் மற்றும் ஒரு சிலரும் சேர்ந்துகொண்டு, 16-3-2002 அன்று முதல் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள். இதற்கிடையே விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு துயர் துடைப்பு நிதியிலிருந்து, மரணம் அடைந்த சுப்பையாவின் மனைவிக்கு, பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்க முன்வந்தார். ஆனால் உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்களின் தூண்டுதலினால், இறந்து போன சுப்பையாவின் மனைவி, அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ளவில்லை. மேலும், உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்களின் தூண்டுதலினால், அவரைச் சார்ந்த ஒரு சிலர், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட இடத்திலேயே மீண்டும் கடைகளை அமைப்பதற்கு முயற்சி செய்துள்ளனர். ஆனால், மாவட்ட நிர்வாகத்தினர் மிகவும் பொறுமை காத்து, அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுக்கெனப் புதிதாக ஒதுக்கப்பட்ட இடத்தில்

2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அவர்களை அமர்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். நிலைமை இப்போது அமைதியாக உள்ளது. சட்டம்-ஒழுங்கு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பியுள்ளார்.

நண்பகல் 12-00

மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் போன்ற வெளியாட்களின் தலையீடு இல்லை என்றால், எவ்விதப் பிரச்சினையும் இருந்திருக்காது. இங்கு முக்கியமான விஷயம், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதுதான். இந்த ஆக்கிரமிப்புகளைச் செய்தவர்கள் மூன்று பிரிவுகளாக உள்ளனர். இரண்டு பிரிவினர், கோயில் நிர்வாகத்தினருடன் ஒத்துழைக்க முன்வருகின்றனர். சட்டமன்ற உறுப்பினருடைய வழிகாட்டுதலில் இயங்கும் ஒரு பிரிவினர் மட்டும், கோயில் நிர்வாகத்தினருக்கு எதிரான நிலையை மேற்கொண்டுள்ளனர். சட்டமன்ற உறுப்பினரின் தலையீடு இல்லாமல் இருந்திருந்தால், இந்த ஆக்கிரமிப்புப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு இருக்கும். ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்குத் தகுந்த மாற்று இடம் வழங்க, கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், ஆக்கிரமிப்புப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி (குறுக்கீடு)

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் இருங்கள், திரு. ஜி.கே. மணி, பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். அந்த விளக்கத்திலே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் ஏதோ பொதுமக்களைத் தூண்டியதைப் போல, அல்லது ஒரு சாரார்— அதிலே ஒரு பிரிவினர், அவர்களுக்கு ஆதரவாக இருந்தாகவும்—அரசு அதிகாரிகளுக்கு ஒத்துழைக்காமல், அந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருப்பதைப் போல இங்கே எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே அது

எங்களுக்கெல்லாம் வருத்தம் அளிக்கிறது. ஒருவர் இறந்திருக்கிறார் என்று சொன்னால், இறந்ததற்குக் காரணம் கேட்பதற்கு, அவர்களுக்கு நிவாரண நிதி வேண்டுமென்று ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஓர் இயக்கத்தின் சார்பிலே கோரிக்கை விடுப்பது என்பது தவறானது அல்ல. அதிலும் முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திலே சொல்கின்றபோது, ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை என்று சொல்கிறார். மற்ற இடங்களில் இறப்பு என்று சொன்னால் 50 ஆயிரம், ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. ஆகவே, இது குறைவாக இருக்கிறது. கூடுதலாக வேண்டும். இறப்புக்கு நியாயம் கேட்டு உண்ணாவிரதம் இருக்கிற நேரத்திலே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்கள் சென்றார்களே தவிர, பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் அல்ல என்பதை அவைக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இறந்து போனவர்களுக்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அதிகப்படியான பணம் தரவேண்டும். நாங்களெல்லாம் பிரச்சினை நடந்த நேரத்தில் போய் இருந்து சமாதானமாக, ஒரு சாதிக் கலவரம் வராமல் தடுத்து நிறுத்திவிட்டு வந்திருக்கிறோம். அங்கே கோரிக்கை, முதலமைச்சருடைய நிதியில் இருந்து அதிகமான தொகையைப் பெற்றுத் தரவேண்டுமென்பது. நாங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லாம், முதலமைச்சரிடம் தெரிவித்து, வாங்கித் தருவதாகத் தெரிவித்து ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். ஆகவே, முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நிதியிலிருந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அதிகப்படியான பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்து போனவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாத்தூர் இராமச்சந்திரன், பருத்தி புடவையாகவே காய்த்து விட்டது உங்களுக்கு. (சிரிப்பு)